**PROCEEDINGS OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED TO CONSIDER THE ISSUE OF ENVIRONMENTAL CLEARANCE BY THE STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA – TN) FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY IN AN EXTENT OF 2.20.50 HECTARE BY M/S.R.RAJANGAM ROUGH STONE AND GRAVEL QUARRY, SF.NO.169/1, 169/2 & 169/3 OF SIRUTHAMUR VILLAGE, UTHIRAMERUR TALUK, KANCHEEPURAM DISTRICT**

**Name of the Project:** Proposed Rough Stone and Gravel Quarry by **M/s.R.Rajangam Rough Stone and Gravel Quarry** in an extent of 2.20.50 Hectare located at SF.No.169/1, 169/2 & 169/3 of Siruthamur Village, Uthiramerur Taluk, Kancheepuram District.

**Venue:** M/s. R R K Mahal, Tirumukoodal – Penayur Road, Palayaseevaram, Kancheepuram District – 631 606.

**Date & Time:** 25.06.2026 – 12.00 PM

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Mr. S.Balakrishnan | Sub Collector<br>Kancheepuram. |
| 2. | Dr. M.Dhinakaran | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 3. | Mr.V.Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Kancheepuram District. |
| 4 | Mr.R.Selvarajan | Assistant Manager<br>Tamil Nadu Pollution Control Board,<br>*Sriperumbudur* |
| 5 | Mr.R.Dravidaselvam | Typist<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 6 | Mr.S.Arunraj | Assistant<br>Tamil Nadu Pollution Control Board, |

| | | |
|---|---|---|
| | | Sriperumbudur |
| 6. | Mr. R.Rajangam | Owner of the Proposed quarry |
| 7. | Public, NGO's and Environmentalists | 74 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Sriperumbdur welcomed the Sub Collector Kancheepuram, Government Officials, General Public and NGO's/ Environmentalists for the Public hearing and informed that the proposed Rough Stone and Gravel quarry by M/s.R.Rajangam, Rough Stone and Gravel Quarry, SF.No. 169/1, 169/2 & 169/3 of Siruthamur Village, Uthiramerur Taluk, Kancheepuram District in an extent of 2.20.50 Hectare attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification. Furthermore, the DEE, TNPCB, Sriperumbudur has also informed the following.

The State Environment Impact Assessment Authority (SEIAA – TN) issued the Terms of Reference (ToR) with a public hearing on 25.10.2025 for preparing the Environmental Impact Assessment (EIA) report for the said activity under the Environmental Impact Assessment Notification, 2006 as amended.

The project proponent has submitted the draft EIA report to the office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur at Oragadam and requested to conduct the Public Hearing Meeting for its proposed activity. In this regard, Public Notices for this Public Hearing Meeting scheduled on 25.06.2026, were published in *Deccan Chronicle* and *Daily Thanthi Newspapers* on 22.05.2026 with the approval of the District Collector, Kancheepuram. Further, Public announcements have also been made via speakers in the surrounding villages about this Public Hearing Meeting.

The District Environmental Engineer has added that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted would be explained through a PowerPoint presentation by the EIA Consultant on behalf of the Project Proponent. Furthermore, the DEE has requested that, after the presentation, the public clearly state their name and village details and then express

their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN and requested the Sub Collector of Kancheepuram to preside over the meeting.

The Sub Collector of Kancheepuram has requested that the project proponent explain the proposed stone quarry project and the Environmental Impact Assessment (EIA) research that was done for the public.

Following that, on behalf of the Project Proponent, the EIA Consultant welcomed the Sub Collector, District Environmental Engineer, Government Officials, General Public and Environmentalists and then explained the Proposed stone quarry Project and EIA study conducted with help of Power Point Presentation.

After the Presentation, the Sub Collector, Kancheepuram has requested the Public to express their views / opinions either verbally or in writing by clearly stating their names and villages. Consequently, the following are the perspectives and viewpoints that the public has expressed:

1. **Mr.Sathya, Mathur Village,**

He stated that the quarry provides livelihoods for rural residents and urged that measures be taken to ensure the safety of workers and the provision of drinking water for them. He also requested that water be sprinkled on the roads three times a day instead of just twice.

2. **Mr.Ramadurai, Arugundram Village,**

He stated that the establishment of the quarry offers employment opportunities to the local community and emphasized the importance of giving priority in hiring to residents of the area. Additionally, he requested that water be sprinkled on the roads three times daily, as opposed to the current twice-daily schedule, in order to effectively control dust. Furthermore, he urged for the temporary suspension of quarry vehicle traffic during peak school hours to ensure the safety of students, and emphasized that quarry operations should be carried out in a manner that causes no inconvenience to the villagers.

3. **Tmt.Sangeetha, Mathur Village,**

She stated that, over the past 20 years, the quarry has supported the livelihoods of rural residents and facilitated their ability to send their children to school. Further she noted that the proposed quarry would provide employment for an additional 10 years and expressed his support for its establishment.

4. **Mr.T.Manokaran, Arugundram Village,**

He urged members of the public attending the consultation meeting to articulate their views openly. He further observed that eight demands had been submitted to the peace committee of these, two namely, the installation of streetlights on the flyover and the construction of the Pinayur-Thirumukkoodal road had been fulfilled, while six demands remained pending. Additionally, he expressed his support for the establishment of the quarry, stating that it provides employment to one individual from each family of those without formal education.

5. **Mr. Baskaran, Palaveri Village,**

He stated that quarries have been operating in the area for twenty five years without adherence to any established protocols such as maintaining required distances between quarries or considering the proximity of forests and residential settlements and observed that no assessments have ever been conducted to evaluate the environmental impact of these operations. Highlighting that permits have been granted for over fifty quarries within this single area, he urged that quarrying activities be relocated elsewhere. He further requested that water be sprinkled on all roads, not just the stretch between Arungundram and Thirumukkoodal, and sought clarification regarding the distance between the quarries and the proposed six-lane highway. Furthermore, he demanded clarification regarding the number of quarries to be granted permission in the area, and ultimately stated that no quarries should be allowed there at all.

6. **Mr.Parthiban, Arungundram Village,**

He stated that the Arungundram area has been adversely affected by quarrying activities and that some residents have developed allergies attributable to dust exposure. He emphasized that no additional quarries should be permitted, as the current operations are sufficient, and he called for initiatives to enhance the preservation of natural resources.

7. **Mr.Sivakumar, Arungundram Village,**

He stated that for the past 28 years, petitions have been submitted to the District Collector urging a ban on quarries, yet permits continue to be granted repeatedly. He noted that no official from any department has inspected the adverse effects caused by the quarries. He further highlighted that school children are affected by quarry vehicles, drivers operate them negligently while using mobile phones, and the ban on quarry vehicle movement between 9:00 AM and 10:00 AM is being ignored. Mentioning that agriculture is harmed and water sources are polluted by the quarries, he demanded that the quarries be relocated away from the Siruthamur, Patta, and Arungundram areas, Further, he stated that the public hearing meeting should have been conducted in the Siruthamur area and ultimately declared that the residents did not favor the establishment of a quarry in their locality.

8. **Mr.Vetrivel, Seethanjeri Village,**

He stated that permits for stone crushers have been issued without proper regulation he noted that he is engaged in sculpture work and that permission was granted to operate a crusher just 10 feet away from the area where they cook. He urged that this matter be given due consideration.

Then, the Sub Collector, Kancheepuram said that if any other members of the public want to express their opinions, they could come forward to register their opinion, views, and suggestion. Since, no others from the public came forward to share their views, and invited the District Environmental Engineer to summarize the meeting's proceedings.

Further, the District Environmental Engineer has summarized about the entire meeting proceedings and also informed that the said views, suggestion and responses of the public are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamil Nadu along with the written representations received from the Public.

Furthermore, the District Environmental Engineer informed that the Proceedings of the Public Hearing Meeting will be made to be displayed at the District Collectorate, Kancheepuram, Uthiramerur Taluk office, Siruthamur Village

Panchayat Office, and Office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Comments, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –Tamil Nadu / MoEF&CC) and the applicant concerned. Finally, the Sub Collector, Kanchipuram has thanked everyone who attended the meeting on behalf of Kancheepuam District Administration.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Sriperumbudur**

**Sub Collector**
**Kancheepuram**

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Tamil & English Newspapers dated 22.05.2026 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 4 & 74 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions were received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting. -19 No's

- **காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம், புல எண்கள். 169/1, 169/2 & 169/3ல் 2.20.50ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.R.ராஜாங்கம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தால் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படுவது தொடர்பாக 25.06.2026 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள்**

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்:** | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம், புல எண்கள். 169/1, 169/2 & 169/3ல் 2.20.50ஹெக்டேர் பரப்பளவில் **தி/ள்.R.ராஜாங்கம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி** திட்டம் நிறுவப்படுவது தொடர்பாக. |
| **இடம்:** | தி/ள். ஆர். ஆர். கே. மஹால், திருமுக்கூடல் – பினாயூர் ரோடு, பழையசீவரம், காஞ்சிபுரம் மாவட்டம் – 631 606. |
| **நாள் மற்றும் நேரம் :** | 25/06/2026 – நண்பகல் 12.00 மணி |

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு.ச.பாலகிருஷ்ணன் | சார் ஆட்சியர்,<br>காஞ்சிபுரம். |
| 2. | முனைவர்.மா.தினகரன், | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 3. | திரு.வா.கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 4. | திரு.இரா.செல்வராஜன் | உதவி மேலாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |
| 5. | திரு.இரா.திராவிடச்செல்வம் | தட்டச்சர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |
| 6 | திரு.செ.அருண்ராஜ் | உதவியாளர் |

| | | |
|---|---|---|
| | | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் |
| 6. | திரு. R.ராஜாங்கம் | உத்தேசிக்கப்பட்ட குவாரி உரிமையாளர் |
| 7. | பொதுமக்கள், தன்னார்வலர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (74 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களையும், பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம் புல எண்கள். 169/1, 169/2 & 169/3ல் தி/எ்.R.ராஜாங்கம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி 2.20.50ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விவரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பதற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 25.10.2025 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/எ்.R.ராஜாங்கம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்கு பொதுமக்கள் கருத்து கேட்புக்

கூட்டமானது காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பழையசீவரம் கிராமம் தி/ள்.ஆர்.ஆர்.கே. மஹாலில் 25.06.2026 அன்று காலை 12.00 மணியளவில் நடைபெறும் என்று "**டெக்கான் கிரானிக்கல்ஸ்**" மற்றும் "**தினத்தந்தி**" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் முறையே 22.05.2026 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள். R.ராஜாங்கம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விவரங்களை திட்ட ஆலோசகர் (EIA Consultant) அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று தெரிவித்தார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார் .

திட்ட ஆலோசகர் (EIA Consultant) அவர்கள் சார் ஆட்சியர் அவர்களையும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ,

வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1.திரு.சத்யா, மதூர் கிராமம்**

இவர் கூறுகையில் குவாரியினால் கிராமப்புர மக்களுக்கு வாழ்வாதாரம் கிடைப்பதாகவும், குவாரியில் பணிபுரியும் நபர்களுக்கு குடிதண்ணீர் மற்றும் அவர்களது பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் செயல்படவேண்டும் எனவும், சாலைகளில் இருபுறமும் இரண்டு முறை தண்ணீர் ஊற்றுவதை மூன்று வேலையிலும் தண்ணீர் ஊற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**2.திரு.இராமதுரை, அருங்குன்றம் கிராமம்,**

இவர் கூறுகையில் குவாரி அமைவதினால் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதாகவும், மேலும் இக்கிராம மக்களுக்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும், சாலைகளில் இருபுறமும் தூசு பரவாமல் இருக்க இருமுறை தண்ணீர் ஊற்றப்படுகிறது அதை மூன்று வேலையும் தண்ணீர் ஊற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் மாணவர்கள் பள்ளி செல்லும் வேலைகளில் குவாரி வாகனங்களின் போக்குவரத்தை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டு கிராம மக்களுக்கு எந்த வித இடையூறு இல்லாமல் குவாரியை நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**3.திருமதி.சங்கீதா, மதூர் கிராமம்**

இவர் கூறுகையில் 20 வருடங்களாக குவாரியினால்தான் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் மற்றும் குழந்தைகளை பள்ளியில் பயிற்றுவிக்க இயல்வதாகவும், மேலும் அமையவிருக்கும் குவாரியினால் மேலும் 10 வருடத்திற்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவே குவாரி அமையவிருப்பதை வரவேற்பதாக கூறினார்.

**4.திரு.மனோகரன், அருங்குன்றம் கிராமம்**

இவர் கூறுகையில் இக்கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வந்துள்ள பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாக தெரியப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும், அமைதிக் குழுவில் தாங்கள் 8 கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் அதில் பினாயூர் – திருமுக்கூடல் சாலை மற்றும் பாலத்தின் மீது மின்விளக்கு அமைத்து கொடுத்தது என இரு கோரிக்கைகள் நிறைவேற்று தந்துள்ளதாகவும் 6 கோரிக்கைகள் மீதமிருப்பதாகவும் கூறினார். மேலும் குவாரியினால் படிப்பறிவற்றவரில் வீட்டில் ஒருவருக்கு வேலை கிடைப்பதனால் குவாரி அமைவதை வரவேற்பதாக கூறினார்.

**5.திரு.பாஸ்கரன், பழவேரி கிராமம்**

இவர் கூறுகையில் 25 வருடங்களாக இப்பகுதியில் குவாரி இயங்கி வருவதாகவும் ஒரு குவாரிக்கும் மற்றொரு குவாரிக்குமான இடைவெளி என்ன, மற்றும் அருகில் காடுகள் உள்ளதா மக்கள் வசிக்கிறார்களா என எந்தவித நடைமுறைகளையும் பின்பற்றவில்லை எனவும், குவாரியினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என இது வரை பரிசோதனை செய்ததே இல்லை எனவும், ஒரே பகுதியில் 50க்கும் மேற்பட்ட குவாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், மாற்று பகுதிக்கு சென்று குவாரி அமைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். அருங்குன்றம் – திருமுக்கூடல் வரை மட்டுமே சாலைகளில் இருபுறமும் தண்ணீர் தெளிப்பதாகவும் அனைத்து சாலைகளிலும் தண்ணீர் தெளிக்க வேண்டும் எனவும், மேலும் ஆறு வழிச்சாலை அமையவிருக்கும் குவாரியில் இருந்து எவ்வளவு இடைவெளியில் அமைந்துள்ளது என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் இப்பகுதியில் எத்தனை குவாரிக்கு அனுமதி வழங்கப்பட இருக்கிறது என்பதை தெளிவுபடுத்த வேண்டும் எனவும் கூறி இறுதியாக இப்பகுதிக்கு குவாரியே வேண்டாம் என கூறினார்.

**6.திரு.பார்த்திபன், அருங்குன்றம் கிராமம்**

இவர் கூறுகையில் குவாரியினால் அருங்குன்றம் பகுதி பாதிப்பு அடைந்துள்ளதாகவும் சிலருக்கு தூசியினால் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாகவும், இதுவரை அனுமதித்துள்ள குவாரியே போதும் இனிமேல் குவாரி வேண்டாம் என கேட்டுக்கொண்டு இயற்கை வளங்களை அதிகப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**7.திரு.சிவகுமார், அருங்குன்றம் கிராமம்**

இவர் கூறுகையில் கடந்த 28 ஆண்டுகளாக மாவட்ட ஆட்சியரிடம் குவாரிகளை தடை செய்ய வழியுறுத்தி புகார் மனு அளித்துள்ளதாகவும், ஆனால் மீண்டும் மீண்டும் குவாரிகளுக்கு அனுமதி வழங்கப்படுவதாகவும், மேலும் குவாரியினால் ஏற்படும் பாதிப்புகளை இதுவரை எத்துறை அலுவலரும் ஆய்வு செய்யவில்லை எனவும், மேலும் பள்ளி குழந்தைகள் குவாரி வாகனங்களினால் பாதிக்கப்படுவதாகவும் வாகன ஓட்டுநர்கள் கைப்பேசியுடன் அலட்சியமாக வாகனங்களை இயக்குவதாகவும், காலை 9 – 10 மணி குவாரி வாகனங்கள் செல்ல தடை விதித்துள்ளதாகவும் ஆனால் குவாரி வாகனங்கள் பின்பற்றுவதில்லை என கூறினார். குவாரியினால் விவசாயம் பாதிக்கப்படுவதாகவும் தண்ணீர் மாசுபடுவதாகவும், சிறுதாமூர், பட்டா, அருங்குன்றம் பகுதிகளுக்கு குவாரியே வேண்டாம் குவாரியை வேறு பகுதிக்கு மாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார். இக்கருத்துக் கேட்பு கூட்டத்தை சிறுதாமூர் பகுதியில் நடத்திருக்க வேண்டும் எனக்கூறி இறுதியாக தங்கள் பகுதிக்கு குவாரியே வேண்டாம் என கூறினார்.

**8.திரு.வெற்றிவேல், சீதஞ்சேரி கிராமம்,**

இவர் கூறுகையில் வரைமுறை இன்றி கிரஷர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதாகவும், தான் சிலை செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளதாகவும், தாங்கள் சமையல் செய்யும் இடத்தில் இருந்து 10அடி

தொலைவில் கிரஷர் இயக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் எனவே இதனை கருத்தில் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் வேறு எவரேனும் தங்களது கருத்துக்களை தெரிவிக்க விரும்பினால் முன்வருமாறு கேட்டுக்கொண்டார். அதனை தொடர்ந்து வேறு எவரும் கருத்துக்களை கூற முன்வரவில்லை என்பதால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை கூட்ட நடவடிக்கை பற்றி சுருக்கமாக எடுத்துரைக்க கேட்டுக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை எடுத்துரைத்தார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார். பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும், மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உத்திரமேரூர் வட்டாட்சியர் அலுவலகம், சிறுதாமூர் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், ஒரகடம் ஆகிய இடங்களில் வைக்கப்படும் எனவும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.inல் வெளியிடப்படும் எனவும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் –தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்களால்

தெரிவிக்கப்பட்டது. இறுதியாக சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்தார்.

| | |
|---|---|
| **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,** | **சார் ஆட்சியர்,** |
| **தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,** | **காஞ்சிபுரம்.** |
| **திருப்பெரும்புதூர்.** | |

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 22.05.2026).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (4 பக்கங்கள் 74 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்படம் அடங்கிய Pendrive– 2 No's.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 19 மனுக்கள்.